**ஜூலை – 26**


# TNPSC துளிகள்

❖ இந்தியக் கடற்படையானது, யார்டு 3034 அஜய் எனப்படும் குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் வாகன (ASW SWC) உருவாக்கத் தொடரின் எட்டாவது மற்றும் இறுதிக் கப்பலினை அறிமுகப்படுத்தியது.

❖ காமெட் எனும் முதல் செயற்கை நுண்ணறிவு வலை தள உலாவியானது சமீபத்தில் பெர்ப்ளெக்ஸிட்டி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் உயிரி ஊக்கி ஒழுங்குமுறை 2025




❖ மானிய விலையில் உரங்களுடன் உயிரி ஊக்கிகளையும் வாங்குவதற்கு விவசாயிகளை கட்டாயப்படுத்துவதை நிறுத்துமாறு மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

❖ பொதுவாக, சில்லறை விற்பனையாளர்கள் உயிரி ஊக்கிகளை வாங்காவிட்டால், யூரியா மற்றும் டை அம்மோனியம் பாஸ்பேட் (DAP) போன்ற மானிய விலையில் உரங்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதில்லை.

❖ உயிரி ஊக்கிகளானது தாவரங்களில் தாவரக் கூறுகளின் செயல்முறைகளைத் தூண்டும் மற்றும் அறுவடையில் விளைச்சலை அதிகரிக்க உதவும் பொருட்கள் ஆகும்.

❖ தாவரங்களிலிருந்து பெறப்பட்ட கழிவுப் பொருட்கள் மற்றும் கடற்பாசி சாறுகள் சில நேரங்களில் அவற்றின் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன.

❖ இந்திய உயிரி ஊக்கிச் சந்தையின் மதிப்பானது 2024 ஆம் ஆண்டில் 355.53 மில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.


❖ 2025 ஆம் ஆண்டில் 410.78 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இதன் மதிப்பு ஆனது 2032 ஆம் ஆண்டில் 1,135.96 மில்லியன் அமெரிக்க டாலர்களாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ இந்தியாவில், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் முறையே 1985 ஆம் ஆண்டு உரக்

கட்டுப்பாட்டு ஆணை மற்றும் 1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிச் சட்டத்தால் நிர்வகிக்கப் படுகின்றன.

## பூஞ்சைத் தாக்குதல் எதிர்ப்புத் திறன் கொண்ட அன்னாசிப்பழம்

- கொல்கத்தாவில் உள்ள போஸ் நிறுவனத்தின் இந்திய ஆராய்ச்சியாளர்கள் AcSERK3 மரபணுவை மேம்படுத்துவதன் மூலம் பூஞ்சைகளுக்கான எதிர்ப்புத் திறனைக் கொண்ட அன்னாசிப்பழத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது தீங்கு விளைவிக்கும் பூஞ்சை நோயான ஃபுசாரியோசிஸை எதிர்த்துப் போராடுவதற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த அணுகுமுறையை வழங்குகிறது.
- ஃபுசாரியோசிஸின் விளைவாக சிதைந்தத் தண்டுகள், கருமையடைந்த இலைகள் மற்றும் பழங்களின் உட்சிதைவு ஏற்படுகிறது என்பதோடு இது குறிப்பிடத்தக்க விளைச்சல் குறைப்புகளுக்கு வழி வகுக்கிறது.





## தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா 2025

- மக்களவையில் விளையாட்டுத் துறை அமைச்சர் தேசிய விளையாட்டுத் துறை நிர்வாக மசோதாவினை அவையில் தாக்கல் செய்தார்.
- இது விளையாட்டு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (BCCI) உள்ளிட்ட தேசிய விளையாட்டு அமைப்புகளை இலக்காக கொண்டது.
- இது விளையாட்டுக் கூட்டமைப்புகளை நிர்வகிப்பதற்காகவும் விளையாட்டு வீரர் நலனை மேம்படுத்துவதற்காகவும் ஒரு வலுவான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கடுமையானப் பொறுப்புணர்வை உருவாக்குவதற்காக ஒரு தேசிய விளையாட்டு வாரியத்தினை (NSB - National Sports Board) அமைப்பதற்கான விதிமுறைகளையும் கொண்டுள்ளது.
- அனைத்து தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகளும் (NSF - National Sports Federations) மத்திய அரசின் நிதியுதவியைப் பெறுவதற்காக தேசிய விளையாட்டு வாரியத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

- தேசிய விளையாட்டு வாரியமானது ஒரு தலைவரைக் கொண்டிருக்கும்.
- மேலும் மத்திய அரசானது "திறமை, நேர்மை மற்றும் தகுதி வாய்ந்த நபர்களுள் ஒருவரை" அதன் உறுப்பினர்களாக நியமிக்கிறது.
- இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் "பொது நிர்வாகம், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுச் சட்டம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளில் சிறப்பு அறிவு அல்லது நடைமுறை அனுபவம்" போன்றவற்றைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.
- தேர்வு மற்றும் தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நியமனங்கள் செய்யப்படும்.
- அந்தத் தேர்வுக் குழுவானது அமைச்சரவை அல்லது கேபினட் செயலாளர் அல்லது விளையாட்டுச் செயலரை அதன் தலைவராக கொண்டு இருக்கும்.
- இது ஒரு விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் ஒருவரையும் உறுப்பினராக உள்ளடக்கியது.
- அச்சிறந்த விளையாட்டு வீரர் துரோணாச்சாரியார் அல்லது கேல் ரத்னா அல்லது அர்ஜுனா விருது பெற்றவராக இருப்பார்.
- ஒரு தேசிய அமைப்பானது, நிர்வாகக் குழுவிற்கான தேர்தல்களை நடத்தத் தவறினால் அல்லது "தேர்தல் நடைமுறைகளில் பெரும் முறைகேடுகளை" செய்திருந்தால், அந்தத் தேசிய அமைப்பின் அங்கீகாரத்தை ரத்து செய்யும் அதிகாரம் தேசிய விளையாட்டு வாரியத்திற்கு இருக்கும்.
- வருடாந்திரமாகத் தணிக்கை செய்யப்பட்டக் கணக்குகளை வெளியிடத் தவறினால் அக்கணக்குகளும் அல்லது அதில் தவறாகப் பயன்படுத்தப்பட்ட பொது நிதியும் இனி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.
- இதில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் தேசிய விளையாட்டுத் தீர்ப்பாயத்திற்கான முன்மொழிவு ஆகும்.
- இது ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் மற்றும் கூட்டமைப்புகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் சம்பந்தப்பட்ட தேர்வு முதல் தேர்தல் வரையிலான சர்ச்சைகளையும் தீர்மானிக்கும்.
- இது நிறுவப்பட்டால், அத்தீர்ப்பாயத்தின் முடிவுகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே மேல்முறையீடு செய்ய முடியும்.
- இந்த மசோதாவானது, நிர்வாகிகளுக்கான வயது வரம்பு விவகாரத்தில் சில சலுகை உரிமைகளை வழங்குகிறது.
- சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகளின் சட்டங்கள் மற்றும் துணை விதிகள் அனுமதித்தால், 70 முதல் 75 வயதுக்குட்பட்டவர்கள் இத்தேர்தலில் போட்டியிட அது அனுமதிக்கும்.
- வயது வரம்பை 70 ஆகக் குறைத்த தேசிய விளையாட்டுக் குறியீட்டிலிருந்து இது ஒரு முக்கிய விலகலாகும்.
- அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு அமைப்புகளும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) வரம்பிற்குள் உட்படும்.
- அரசு நிதியைச் சார்ந்து இல்லாததால், BCCI அமைப்பானது இதை மிகக் கடுமையாக எதிர்த்துள்ளது.
- 2028 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பட்டியலில் கிரிக்கெட் போட்டி சேர்க்கப் பட்டதைத் தொடர்ந்து, தற்போது, ஒலிம்பிக் போட்டிகளின் ஒரு பகுதியாக இருக்கும் BCCI, இம்மசோதா சட்டமாக மாறியவுடன் அதன் விதிகளுக்கு இணங்க வேண்டும் என்று இந்த அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர்கள் அல்லது மாநிலத் தேர்தல் ஆணையம் அல்லது மாநிலங்களின் முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் அல்லது துணைத் தேர்தல் ஆணையர்கள் அடங்கிய ஒரு தேசிய விளையாட்டுத் தேர்தல் குழு நிறுவும் விதியையும் இந்த மசோதா கொண்டுள்ளது.




## தேசிய ஊக்க மருந்து எதிர்ப்பு (திருத்தம்) மசோதா 2025

- விளையாட்டுத் துறை அமைச்சர் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு (திருத்தம்) மசோதா 2025 என்ற மசோதாவை அவையில் தாக்கல் செய்தார்.
- உலக ஊக்க மருந்து எதிர்ப்பு நிறுவனம் (WADA) கோரிய மாற்றங்களை இது இணைக்க முயல்கிறது.
- நாட்டின் ஊக்க மருந்து எதிர்ப்பு முகமையின் (NADA) செயல்பாட்டில் "அரசாங்கத்தின் தலையீட்டை" WADA அமைப்பு ஆட்சேபித்தது.
- இந்தச் சட்டம் முதலில் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.
- ஆனால் WADA எழுப்பிய ஆட்சேபனைகள் காரணமாக அதன் செயல்பாட்டை நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது.
- விளையாட்டுகளில் ஊக்க மருந்து பயன்பாடுகளின் எதிர்ப்புக்கான தேசிய வாரியத்தை நிறுவுவதற்கு இது ஆட்சேபனை தெரிவித்தது.
- ஊக்க மருந்து எதிர்ப்பு விதிமுறைகள் குறித்து அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்குவதற்கு அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
- இந்த வாரியம் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- இது தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு முகமையின் (NADA) செயல்பாடுகளை மேற் பார்வையிடவும், அதற்கான வழிமுறைகளை வழங்கவும் அங்கீகரிக்கப் பட்டது.
- ஒரு தன்னாட்சி அமைப்பில் அரசாங்கத்தின் தலையீடு என்று கூறி WADA அமைப்பு இந்த விதியை நிராகரித்தது.
- ஆனால் திருத்தப்பட்ட மசோதாவில் இந்த வாரியம் குறித்த விதிமுறைகள் தக்க வைக்கப் பட்டுள்ளன.

- ஆனால் அது NADA அமைப்பை மேற்பார்வையிடும் அதிகாரங்களையோ அல்லது அதற்கு முன்னர் ஒதுக்கப்பட்ட ஆலோசனை வழங்கீட்டுப் பாத்திரங்களையோ கொண்டிராமல் உள்ளது.




## இந்தியாவில் உலகின் மிகப்பெரிய தானியச் சேமிப்புத் திட்டம்

- கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய தானியச் சேமிப்புத் திட்டத்தினை இந்தியா செயல்படுத்துகிறது.
- இது கிராமப்புற வேளாண் உள்கட்டமைப்பில் புரட்சியை ஏற்படுத்துவதையும், நாடு முழுவதும் உள்ள முதன்மை வேளாண் கடன் சங்கங்களை (PACS - Primary Agricultural Credit Societies) மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு லட்சிய மிக்க முன்னெடுப்பு ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி அன்று அங்கீகரிக்கப்பட்ட இந்தத் திட்டமானது, தற்போது ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.
- மேலும் இது அடிமட்ட அளவில் தானியச் சேமிப்பு மற்றும் வேளாண் தளவாடங்களை உரு மாற்றும் நோக்கம் கொண்டதாகும்.
- கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, மக்களவையில் எழுத்துப்பூர்வப் பதிலில் இந்தப் புதுத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.
- PACS மட்டத்தில் உள்கட்டமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்ற இந்தத் திட்டத்தில் கிடங்குகள், தளவாட வாடகை பெறல் மையங்கள், உணவுப் பதப்படுத்தும் மையங்கள் மற்றும் நியாய விலைக் கடைகள் ஆகியவையும் அடங்கும்.
- வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF - Agriculture Infrastructure Fund), வேளாண் சந்தைப் படுத்தல் உள்கட்டமைப்புத் திட்டம் (AMI - Agricultural Marketing Infrastructure Scheme),

வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணைத் திட்டம் (SMAM - Sub-Mission on Agricultural Mechanization) மற்றும் உணவு பதப்படுத்தும் சிறு குறு நிறுவனங்களின் மீதான பிரதான் மந்திரி முறைப்படுத்தல் திட்டம் (PMFME - Pradhan Mantri Formalization of Micro Food Processing Enterprises) போன்ற பல்வேறு அரசுத் திட்டங்களை நன்கு ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த மேம்பாடுகள் செயல்படுத்தப் படுகின்றன.

- இதன் முன்னோடிக் கட்டத்தின் ஒரு பகுதியாக, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, இராஜஸ்தான், தெலுங்கானா, கர்நாடகா, திரிபுரா, அசாம் மற்றும் உத்தரகாண்ட் உள்ளிட்ட 11 மாநிலங்களில் உள்ள 11 PACS சங்கங்களில் இந்தக் கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- இதுவரையில் உருவாக்கப்பட்டுள்ள மொத்தச் சேமிப்புத் திறன் 9,750 மெட்ரிக் டன்கள் ஆகும்.
- மகாராஷ்டிரா, இராஜஸ்தான், தமிழ்நாடு, குஜராத் மற்றும் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் PACS சங்கங்களின் எண்ணிக்கையில் முன்னணியில் உள்ளன.

**ESTIMATED PRODUCTION (in million tonne)**

| | 2023-24 | 2024-25 | Increase |
|---|---|---|---|
| Rice | 113.26 | 119.93 | 5.89% |
| Maize | 22.24 | 24.54 | 10.34% |
| Pulses | 6.97 | 6.95 | -0.29% |
| Total foodgrains | 155.77 | 164.7 | 5.73% |
| Total oilseeds | 24.16 | 25.74 | 6.54% |
| Sugarcane | 453.16 | 439.3 | -3.06% |
| Cotton | 32.52 | 29.92 | -8% |

## நிலக்கரித் துறையின் நிலைத்தன்மை மற்றும் போட்டித் தன்மைக்கான உத்திகள் 2025

- இந்தியா இந்தத் துறையை மிக நவீனமயமாக்கவும், சுற்றுச்சூழல் இணக்கத்தை நன்கு மேம்படுத்தவும், இறக்குமதிகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் வேண்டி சில பன்முக உத்திகளைக் கடைபிடித்து வருகிறது. அவை
  - பசுமையாக்க முன்னெடுப்புகள்
  - ஆற்றல் செயல்திறன் நடவடிக்கைகள்
  - சுரங்க நடவடிக்கைளில் வெளியேறும் நீரின் திறம் மிக்க பயன்பாடு
  - சுரங்க இருப்புகளின் மேல் உள்ள அதிகப் படியான பொருட்களை முறையான வகையில் பயன்படுத்துதல்
  - பசுமைக் கடன் திட்டம்
  - போக்குவரத்து இணைப்பு
  - நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிப்பு இல்லாத தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
  - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தூய்மையான நிலக்கரி முன்னெடுப்புகள்.
- இந்தியா உலகின் 5வது பெரிய நிலக்கரி இருப்புகளைக் கொண்டுள்ளது.

- மேலும் நாட்டின் எரிசக்தித் தேவைகளில் 55% பங்கினை நிலக்கரியேக் கொண்டு உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## AdFalciVax - மலேரியா தடுப்பூசி





- இந்தியா AdFalciVax என்ற பல்நிலை மலேரியா தடுப்பூசியை உருவாக்கி வருகிறது.
- இந்தத் தடுப்பூசியானது மனிதத் தொற்றுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குவதோடு, ஒட்டுண்ணியின் ஏந்திகள்/வெக்டர் மூலம் பரவும் சமூகப் பரவலையும் குறைக்கிறது.
- AdFalciVax என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் மீளிணைவு மரபணுவைக்

கொண்ட மலேரியா தடுப்பூசி ஆகும்.

- இது குறிப்பாக மலேரியாவின் மிகவும் ஆபத்தான வடிவத்திற்கு காரணமான ஒட்டு உண்ணியான பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரத்தின் இரண்டு முக்கியமான நிலைகளை குறி வைத்து வடிவமைக்கப் பட்டுள்ளது.

## CP மீறல்




- பேரியான்களில் மின்னூட்டம்-சமநிலை (CP) சமச்சீர்மை உடைவதற்கான முதல் சோதனை வழி ஆதாரமானது CERN மையத்தின் LHCb ஒத்துழைப்பால் பெறப் பட்டு உள்ளது.
- இதன் முடிவு ஆனது துகள் சார் இயற்பியலின் நிலையான மாதிரியுடன் ஒத்துப் போகிறது.
- தற்போதைய அண்டவியல் மாதிரிகள், பெருவெடிப்பு ஆனது பருப்பொருள் மற்றும் எதிர் பொருளின் ஒரு பெரிய வெடிப்பை உருவாக்கியது என்று கூறுகின்றன என்பதோடு அவற்றில் பெரும்பாலானவை சிறிது நேரத்திலேயே மீண்டும் இணைக்கப் பட்டு அழிக்கப்பட்டன.
- ஆனால் பேரண்டம் ஆனது சான்றுகளில் மிகக் குறைந்த எதிர்பொருளுடன், சுமார் முற்றிலும் பருப்பொருளால் ஆனது போல் தோன்றுகிறது.
- இந்த அதிகப்படியான பருப்பொருள் ஆனது ஒரு நிலையான மாதிரியால் விளக்கப் படவில்லை, மேலும் அதன் இருப்பு ஆனது இயற்பியலில் ஒரு முக்கியமான மர்மமாகும்.
- 1964 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் ஜேம்ஸ் குரோனின், வாலண்டைன் ஃபிட்ச் மற்றும் சகாக்கள் நடுநிலை K மீசான்களின் சிதைவு குறித்து ஒரு பரிசோதனையை நடத்தினர்.
- பலவீனமான தொடர்பு ஆனது CP சமச்சீரை மீறுவதாக இது காட்டுகிறது, இது பருப்பொருள் மற்றும் எதிர்பொருள் ஆகியவற்றை வித்தியாசமாக செயல்படுத்தக் கூடும் என்பதைக் குறிக்கிறது.

- ஃபிட்ச் மற்றும் குரோனின் 1980 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றனர்.
- CP சீர்மை மீறல் குறித்த ஏராளமான அவதானிப்புகள் பின்னர் பிற மீசோனிக் அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தற்போது நிலையான மாதிரியின் ஏற்றுக் கொள்ளப்பட்ட பகுதியான இந்த நிகழ்வு ஆனது கபிப்போ–கோபயாஷி–மஸ்காவா (CKM) அணிப் பெருக்க முறையினால் அளவுருவாக்கப் படுகிறது.
- இது வெவ்வேறு தலைமுறைகளின் குவார்க்குகள் கலப்பு எனப்படும் ஒரு செயல்முறை வழியான பலவீனமான தொடர்பு மூலம் ஒன்றுக்கொன்று மாறுவதற்கான பல்வேறு நிகழ்தகவுகளை விவரிக்கிறது.

## குறுகிய தூர உந்து விசை எறிகணைகள் அக்னி-I மற்றும் பிருத்வி-II சோதனைகள் 2025





- பிருத்வி-II மற்றும் அக்னி-I ஆகிய குறுகிய தூரத் தாக்குதல் வரம்புடைய உந்துவிசை எறிகணைகள் ஆனது ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டன.
- பிருத்வி-II மற்றும் அக்னி-I ஆகியவை உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் எறிகணை ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு பகுதியாகும்.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (DRDO) உருவாக்கப் பட்டது.
- பிருத்வி-II என்பது சுமார் 250–350 கிலோ மீட்டர் தாக்குதல் வரம்பைக் கொண்ட ஒரு நிலம் விட்டு நிலம் பாயும் குறுகிய தூர தாக்குதல் வரம்புடைய உந்துவிசை எறிகணை ஆகும்.
- இது திரவ உந்துவிசை, மேம்பட்ட வரையறுக்கப்பட்ட வழிசெலுத்தல் மற்றும் 500 கிலோ கிராம் எடையிலான ஆயுதம் ஏந்துதல் திறன் கொண்டது.
- அக்னி-I என்பது 700–900 கிலோ மீட்டர் தூரத் தாக்குதல் வரம்புடையது மற்றும் 1,000 கிலோ எடையுள்ள ஆயுதங்களை சுமக்கும் திறன் கொண்ட ஒரு சாலை வழி மற்றும் இரயில் வழி ஏவக்கூடிய எறிகணை ஆகும்.
- இது ஒரு முக்கிய நடுத்தர தூர தாக்குதல் தடுப்பு வரம்புடைய எறிகணையாகும்.

- இவை இரண்டும் அணு மற்றும் வழக்கமான போர்முனைகளை சுமந்து செல்லும் திறன் கொண்டவை மற்றும் இந்தியாவின் அணுசக்தி முக்கூட்டு அமைப்பில் ஒருங்கிணைந்தவையாகும்.

## SNIFS பரிசோதனை

- நாசா மற்றும் பிற சர்வதேச சூரிய இயற்பியலாளர்கள், நியூ மெக்ஸிகோவிலிருந்து ஓர் அதி திறன் வாய்ந்த ஒருங்கிணைந்த சூரிய உமிழ்வு புல நிறமாலை வரைவி (Solar EruptioN Integral Field Spectrograph- SNIFS) சோதனை ஏவு கலத்தினை விண்ணில் ஏவ உள்ளனர்.
- அதன் அதி திறன் வாய்ந்த ஏவு கலமானது சூரிய வளிமண்டலத்தின் மிகவும் சிக்கலான பகுதியான நிற மண்டலத்தினை ஆய்வு செய்வதற்காக புதிய வாய்ப்பினை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- SNIFS என்பது சூரியனை ஆய்வு செய்வதற்காக வேண்டி விண்ணில் ஏவப்பட்ட முதல் ஒருங்கிணைந்த புற ஊதா புல நிறமாலைமானி ஆகும்.
- சூரியனின் புலப்படும் மேற்பரப்புக்கும் (ஃபோட்டோஸ்பியர்-ஒளிமண்டலம்) அதன் மில்லியன் டிகிரி வெப்பத்திலான கொரோனா பகுதிக்கும் இடையில் உள்ள ஒரு மெல்லிய, சிவப்பு நிற அடுக்கு நிற மண்டலம்-குரோமோஸ்பியர் ஆகும்.
- இது சூரிய சுடர்கள், பிளாஸ்மா பாய்வுகள் மற்றும் தீவிர ஆற்றல் ஓட்டங்களைக் கொண்டுள்ளது.





# சுற்றுச்சூழல் செய்திகள்


## அம்ப்ரோசியா வண்டு - கேரள இரப்பர் தோட்டங்கள்

- கேரளாவில் உள்ள இரப்பர் தோட்டங்கள் வண்டு - பூஞ்சை கூட்டுத் தாக்குதலால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

- ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் அம்ப்ரோசியா வண்டு (யூப்லாடிபஸ் பேரலலஸ்) ஒட்டுண்ணியை இதற்கான காரணமாக அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த வண்டு ஆனது ஃபுசேரியம் அம்ப்ரோசியா மற்றும் ஃபுசேரியம் சோலானி ஆகிய இரண்டு பூஞ்சை இனங்களுடன் பரஸ்பர தொடர்பைப் பகிர்ந்து கொள்வதாக என்று அறிவிக்கப் பட்டுள்ளது.
- F. சோலானியானது வளர்ந்த அம்ப்ரோசியா வண்டுகளுடன் இணைந்து காணப் படுவதற்கான முதல் பதிவு இதுவாகும்.




## மஞ்சள் அனகோண்டாக்களின் புதிய இயக்கமுறை




- புதிதாகப் பிறந்த மஞ்சள் அனகோண்டாக்கள் பயன்படுத்திய இதற்கு முன்னர் பதிவு செய்யப் படாத தப்பிக்கும் இயக்க முறையை அறிவியலாளர்கள் ஆவணப்படுத்தி மாதிரியாகக் கொண்டுள்ளனர்.
- 'S-தொடக்கம்' என்று அழைக்கப்படுகின்ற இந்த இயக்கம் ஆனது பாம்புகள் தான் உணர்ந்த அச்சுறுத்தல்களிலிருந்து தப்பிக்கப் பெருமளவில் பயன்படுத்துகின்ற ஒரு புதுமையான, தள அமைப்பு அல்லாத இயக்கமுறையைக் குறிக்கிறது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது பாம்புகளின் பரிணாம வளர்ச்சி மற்றும் மெல்லுடல் கொண்ட எந்திரங்களின் வடிவமைப்பின் ஆய்வில் புதிய வாய்ப்புகளை வழங்குகிறது.

- S-தொடக்கம் என்பது தொடர்ந்து பயன்படுத்த முடியாத ஒரு நிலையற்ற இயக்கம் ஆகும்.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்தியாவில் தகவமைப்பு மிக்க மற்றும் வளமான நகரங்களை நோக்கி என்ற அறிக்கை

- இந்த அறிக்கையானது உலக வங்கியால் வெளியிடப்பட்டது.
- இது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டது
- புதிய தகவமைப்பு மிக்க மற்றும் பசுமையான நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளுக்கான மொத்த முதலீட்டுத் தேவைகள் இந்தியாவில் 2050 ஆம் ஆண்டிற்குள் 2.4 டிரில்லியன் டாலராக இருக்கும் என இது மதிப்பிட்டுள்ளது.
- இந்தியாவில், 2020 ஆம் ஆண்டில் 480 மில்லியனாக இருந்த நகரங்களில் வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கையானது 2050 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட இரு மடங்காக 951 மில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 70% புதிய வேலைவாய்ப்புகள் அவற்றிலிருந்து உருவாகும் என்ற நிலையில் பொருளாதார வளர்ச்சியின் மையங்களாக இந்திய நகரங்கள் மிகப் பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளன.
- இருப்பினும், தீவிர வானிலை நிகழ்வுகள் எதிர்காலத்தில் பில்லியன் கணக்கான டாலர்கள் இழப்புகளுக்கு வழி வகுக்கும் என்பதால், அதைச் சமாளிக்க சரியான நேரத்தில் நடவடிக்கை தேவைப்படும்.
- அதே நேரத்தில், கடுமையான வெப்ப அலைகள் மற்றும் நகர்ப்புற வெப்பத் தீவு விளைவுகள் ஏற்கனவே நகர மையங்களில் வெப்பநிலையினை அதிகரித்துள்ளதோடு, வெப்ப நிலையானது அங்கு 3-4 டிகிரிக்கு மேல் உயர காரணமாகின்றன.
- கட்டிடப் பகுதிகளின் விரைவான வளர்ச்சியும் புயல்களால் ஏற்படும் வெள்ள நீரை உறிஞ்சும் நகரங்களின் திறனைக் குறைத்து, வெள்ளத்தின் மூலமான அதிகப் பாதிப்பிற்கு அவற்றை உள்ளாக்குகிறது.
- இந்த அறிக்கை, சென்னை, இந்தூர், புது டெல்லி, லக்னோ, சூரத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய 24 இந்திய நகரங்களில் சிறப்பு கவனம் செலுத்தி ஆய்வு செய்தது.
- இந்திய நகரங்களுக்கு அவசரமாக உதவுவதற்கும், வெள்ள நீர் வெளியேற்றத்தினைச் சிறப்பாக ஒழுங்குமுறைப்படுத்துதல், பசுமையான இடங்கள் மற்றும் குளிர் கூரைகளை நிறுவுதல் மற்றும் பயனுள்ள முன் எச்சரிக்கை அமைப்புகள் உள்ளிட்ட கடுமையான நகர்ப்புற வெப்பம் மற்றும் வெள்ளத்தை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற திட்டங்களை நிர்வகித்து பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு ஆதரவளிப்பதற்கென சில முக்கியப் பரிந்துரைகளை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டியது.
- அகமதாபாத் நகர அரசானது, முன் எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல், சுகாதாரத் தயார்நிலையை மேம்படுத்துதல், வெளிப்புறத் தொழிலாளர்களுக்கான பசுமைப் பரவலை அதிகரித்தல் மற்றும் பணி நேரத்திற்கான அட்டவணைகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ள ஒரு வெப்பச் செயல் திட்ட மாதிரியை உருவாக்கியுள்ளது.
- கொல்கத்தாவானது நகர அளவிலான வெள்ள முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை


அமைப்பை ஏற்றுள்ளது.

- இந்தூர் ஒரு நவீன திடக்கழிவு மேலாண்மை அமைப்பில் முதலீடு செய்து, அதன் மூலம் தூய்மையை மேம்படுத்துதல் மற்றும் பசுமைசார் வேலைகளை ஆதரித்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.
- சென்னை நகரம் ஒரு முழுமையான இடர் மதிப்பீடுடன் சேர்த்து பருவநிலைத் தகவமைப்பு மற்றும் குறைந்த கரிம வளர்ச்சி ஆகிய இரண்டையும் இலக்காகக் கொண்டு ஒரு பருவநிலைச் செயல் திட்டத்தை ஏற்றுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## Cy-TB தோல் பரிசோதனை - கேரளா





- காசநோய் (TB) தொற்றைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்காக என்று கேரளா Cy-TB எனப்படும் புதிய தோல் பரிசோதனையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- காசநோய் தொற்று ஆனது பாதிப்பில் உள்ள காசநோய் பாதிப்பிலிருந்து வேறுபட்டது.
- காசநோய் தொற்று உள்ள ஒருவர் தமது உடலில் காசநோய் தொற்றை ஏற்படுத்தும் உயிரினத்தை (மைக்கோபாக்டீரியம் காசநோய்) கொண்டுள்ளார்.
- ஆனால் அந்த உயிரினம் உடலில் செயலற்றதாக இருக்கும் என்பதோடு மேலும் அந்த நபருக்கு எந்த காசநோய் அறிகுறிகளும் இருக்காது அல்லது அவர் தொற்றினைப் பரப்பவும் மாட்டார்.

- இருப்பினும், சிகிச்சையளிக்கப் படாவிட்டால், இவர்களில் 5-10% பேரின் நிலை உடலின் நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடையும் போது செயலில் உள்ள காசநோய் பாதிப்பினை உருவாக்கும் நிலைக்கு முன்னேறும், இதனால் காசநோய் பாக்டீரியா தொற்று ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

### பசுமை ஹைட்ரஜன் பள்ளத்தாக்குப் பிரகடனம் 2025

- ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு பசுமை ஹைட்ரஜன் பள்ளத்தாக்குப் பிரகடனத்தை வெளியிட்டார்.
- பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கான இந்தியாவின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு விரிவான செயல் திட்டத்தினை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்தியாவின் பசுமைப் பொருளாதார மாற்றத்தில் ஆந்திரப் பிரதேசத்தை ஒரு முக்கிய மையமாக மாற்றுவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.
- இந்தியாவின் ஓர் உள்நாட்டு விநியோகச் சங்கிலியை உருவாக்குவதே இந்த அறிவிப்பின் ஒரு மையக் கருவாகும்.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்படும் மின்னாற்பகுப்புக் கூறுகள் மற்றும் சேமிப்புத் தீர்வுகளில் 60% அளவைக் கொண்டிருக்கும்.
- பசுமை ஹைட்ரஜன் பள்ளத்தாக்கு இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்தப் பசுமை ஹைட்ரஜன் திறன் சுற்றுச்சூழல் அமைப்பையும் கொண்டிருக்கும்.
- 2029 ஆம் ஆண்டிற்குள் 5 ஜிகாவாட் (GW) திறன் கொண்ட மின்னாற்பகுப்பு உற்பத்தித் திறனை உருவாக்குவதே இதன் முக்கிய இலக்காகும்.
- புதுப்பிக்கத்தக்க மின்சார ஆற்றலைப் பயன்படுத்தி தண்ணீரைப் பிரித்து பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கு மின்னாற்பகுப்பு கருவிகள் அவசியம் ஆகும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### கைத்தறி விருதுகள் 2024

- 2024 ஆம் ஆண்டின் தேசிய அளவிலான கைத்தறி விருதுகளுக்கு ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

- ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று புது டெல்லியில் நடைபெற உள்ள 11வது தேசிய கைத்தறி தின விழாக் கொண்டாட்டத்தின் போது குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களால் இந்த விருதுகள் வழங்கப்பட உள்ளன.
- சந்த் கபீர் கைத்தறி விருதைப் பெறும் ஐந்து மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசமும் ஒன்றாகும்.
- இத்துறையின் வளர்ச்சிக்கு மிகவும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கிய சிறந்த கைத்தறி நெசவாளர்களை அங்கீகரிப்பதற்காக இது வழங்கப்படுகிறது.
- சந்த் கபீர் கைத்தறி விருதுக்கு லக்கா ஸ்ரீனிவாசுலு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- கர்னாட்டி முரளி மற்றும் ஜுஜாரே நாகராஜு மற்ற இருவர் 2024 ஆம் ஆண்டிற்கான தேசியக் கைத்தறி விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- வெங்கடகிரி ஜாம்தானி புடவைகள் தொடர்பான அவரது பணிக்காக வேண்டி லக்கா ஸ்ரீனிவாசுலு இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இதற்கிடையில், பல் முக்கோண வடிவில் மடிக்கப்பட்டு நிறமேற்றப்படும் (Multi Diamond Tie and Dye Silk Saree) பட்டுச் சேலை மற்றும் அதன் வடிவமைப்பு உருவாக்கத்திற்கான பங்களிப்புக்காக முறையே கர்னாட்டி முரளி மற்றும் J. நாகராஜு ஆகியோர் இந்த விருதைப் பெறுவார்கள்.
- சந்த் கபீர் விருது பெறுபவருக்கு 3.5 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, ஒரு தங்க நாணயம், ஓர் அங்கீகாரச் சான்றிதழ் மற்றும் ஒரு சால்வை வழங்கப்படும்.
- தேசியக் கைத்தறி விருது பெறுபவருக்கு 2 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, ஒரு சான்றிதழ் மற்றும் ஒரு சால்வை வழங்கப்படும்.
- இது ஜவுளி அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**List of Sant Kabir and National Handloom Awardees for the year, 2024**

| Sl. No. | State | WSC | Year of Award | Name of Award | Applicant Name | Product / Skill |
|---|---|---|---|---|---|---|
| **Sant kabir Awardees** | | | | | | |
| **Sl. No.** | **State** | **WSC** | **Year of Award** | **Name of Award** | **Applicant Name** | **Skill/ Product** |
| 1 | Odisha | Bhubaneswar | 2024 | Sant Kabir Handloom Award | Sh. Arindra Meher | SANT KABIR TIE & DYE SILK SAREE |
| 2 | Andhra Pradesh | Vijayawada | 2024 | Sant Kabir Handloom Award | Sh. Lakka Sreenivasulu | Venkatagiri Jamdhani Sarees (3 Samples) |
| 3 | Maharashtra | Mumbai | 2024 | Sant Kabir Handloom Award | Sh. Rajendra Sudarshan Ankam | Unique Weaving Art |
| 4 | Assam | Guwahati | 2024 | Sant Kabir Handloom Award (Exclusively for women) (KDC) | Ms. Anuradha Kuli | Saree (Mulberry, Eri Spun, Muga) |
| 5 | Uttar Pradesh | Varanasi | 2024 | Sant Kabir Handloom Award (Languishing) | Sh. Mohammad Hanif Ansari | Jamdani Rangkat Saree |

## சுஹானி ஷா - FISM 2025 விழாவில் 'மாயவித்தைக்காரர்களுக்கான ஆஸ்கார்' வென்ற முதல் இந்தியர்

- இராஜஸ்தானைச் சேர்ந்த சுஹானி ஷா, Fédération Internationale des Sociétés Magiques (FISM)

சங்கத்தின் 'சிறந்த மாயவித்தைக்காரர் 2025' விருதை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

- இது இயங்கலை வழி மாயவித்தை கலைப் பிரிவில் அவரது சிறப்பை அங்கீகரிக்கிறது.
- இது மாயவித்தை கலைஞர்களுக்கான ஆஸ்கார் விருதுகள் என்று பிரபலமாக அறியப் படுகிறது.
- இந்த விருதானது இத்தாலியின் டொரினோவில் நடைபெற்ற மதிப்புமிக்க FISM உலக சாம்பியன்ஷிப் விழாவில் வழங்கப் பட்டது.
- FISM உலக மாயவித்தை சாம்பியன்ஷிப் என்பது Fédération Internationale des Sociétés Magiques என்ற அமைப்பால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப் படும் ஒரு சர்வதேசப் போட்டியாகும்.
- 1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட FISM, மாயவித்தை கலைஞர்களுக்கான மிக உயர்ந்த உலகளாவியத் தளமாகக் கருதப்படுகிறது.




# இதரச் செய்திகள்


## குளிர்கால மூடுபனி பரிசோதனையின் 10 ஆண்டுகள்

- குளிர்கால மூடுபனி பரிசோதனை (WiFEX) 2015 ஆம் ஆண்டு குளிர்காலத்தில் புது டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் (IGIA) தொடங்கப் பட்டது.
- WiFEX என்பது மூடுபனியை மட்டுமே மையமாகக் கொண்ட உலகின் சில நீண்டகால திறந்தவெளி சோதனைகளில் ஒன்றாகும்.
- இது புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தின் (IITM) தலைமையில் நடைபெற்றது.
- தற்போது WiFEX ஆனது வட இந்தியாவில் உள்ள பல விமான நிலையங்களுக்கு உள்ளூர் மயமாக்கப்பட்ட, ஓடுபாதை சார்ந்த மூடுபனி கணிப்புகளை விரிவுபடுத்துகின்ற WiFEX

-II எனும் அதன் அடுத்தக் கட்டத்தில் உள்ளது.




## கம்சட்கா தீபகற்ப நிலநடுக்கம் 2025





- ரஷ்யாவின் கம்சட்கா பிராந்தியத்தின் கிழக்குக் கடற்கரையில் 6.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.
- இது மேற்கில் ஒகோட்ஸ்க் கடலாலும், கிழக்கில் பசிபிக் பெருங்கடல் மற்றும் பேரிங் கடல் ஆகியவற்றாலும் சூழப்பட்டுள்ளது.
- கம்சட்காவானது பசிபிக் மற்றும் வட அமெரிக்க கண்டத் தட்டுகளின் பேரியக்கவியல் (Tectonic - டெக்டோனிக்) தகடுகளின் சந்திப்பில் அமைந்து உள்ளது.
- இது பூகம்பங்கள் மற்றும் எரிமலைச் செயல்பாடுகளுக்கு ஒரு மையமாக அமைகிறது.

- இந்தப் பகுதி பசிபிக் எரிமலை வளையத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும்.
- இது அதன் புவியியல் உறுதியற்றத் தன்மைக்குப் பெயர் பெற்றது.
- யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமாக நியமிக்கப்பட்ட கம்சட்காவின் எரிமலைகளும் கம்சட்காவில் அமைந்துள்ளன.
- இந்தப் பகுதியில் ஸ்ரெடின்னி (மத்திய) மலைத்தொடர் மற்றும் வோஸ்டோக்னி (கிழக்கு) மலைத்தொடர் என்ற இரண்டு முக்கிய மலைத்தொடர்கள் உள்ளன.

## லட்சத்தீவில் உள்ள பித்ரா தீவைக் கையகப்படுத்துதல்

- லட்சத்தீவு அரசாங்கமானது, பாதுகாப்புத் தேவைகளுக்காக பித்ரா தீவைக் கையகப் படுத்த திட்டமிட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையின் மூலம், பித்ராவானது அத்தீவுக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப் பட்ட மூன்றாவது தீவாக மாறும்.
- இத்தீவுக் கூட்டத்தில் உள்ள மற்ற இரண்டு இந்தியக் கடற்படைத் தளங்களில் ஒன்று தலைநகரான கவரட்டியில் உள்ள ஐஎன்எஸ் த்வீப்ரக்சக் ஆகும்.
- மற்ற ஒன்று தென்கோடி தீவான மினிகாயில் உள்ள ஐஎன்எஸ் ஜடாயு ஆகும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 271 குடியிருப்பாளர்களுடன், லட்சத்தீவில் உள்ள மக்கள் வசிக்கும் 10 தீவுகளில் பித்ரா மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்டதாக உள்ளது.




## இலங்கையின் வஸ்கடுவா ஸ்ரீ சுபூதி விஹாரயாவில் உள்ள அசோகத் தூணின் பிரதி

- இலங்கையில் உள்ள ஒரு புத்தக் கோவிலின் வளாகத்தில் பண்டைய அசோகத்தூணின் பிரதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- இது பேரரசர் அசோகரின் மரபை ஆழமாக அங்கீகரிப்பதைக் குறிக்கிறது.
- பௌத்தத்தில் வேரூன்றிய ஆன்மீக மற்றும் கலாச்சார நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு இந்தியாவும் இலங்கையும் மேற்கொண்ட பரந்த முயற்சிகளையும் இது பிரதிபலிக்கிறது.
- அசோகர் தனது மகன்கள் அர்ஹத் மஹிந்தா மற்றும் அர்ஹத் சங்கமித்தா மூலம் இலங்கையில் புத்த சாசனத்தினை நிறுவுவதில் அவர் வகித்தப் பங்கை இது வலியுறுத்தியது.

- அசோகர் தூண் என்பது பேரரசர் அசோகரின் பௌத்தப் பங்களிப்பிற்கான காலத்தால் அழியாத சின்னமாகும்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★